DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 178-2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 17**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்புலட்சுமி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 26.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.08.2021ந் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் ்காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண் 168/2021 சட்டப்பிரிவு 341, 294(b), 307 இ.த.ச Altered 341, 294(b), 302 இ.த.ச வழக்கு கோப்பை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துகொண்டேன். மேற்படி வழக்கு கோப்பானது 14.05.2021ந் தேதி உதவி ஆய்வாளர் ரத்தினசாமி அவர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ஆனந்தகுமார் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று 15.00 மணிக்கு சாட்சிகள் பாக்கியராஜ், ஜெயராமன் ஆகியோர்களை விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தாயர் செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகள் லாவண்யா, ரமேஷ்குமார், குபேந்திரன், மனோகரன் ஆகியோர்களை

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரணை செய்த வகையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் வழக்கின் எதிரி சுந்தரபாண்டியன் என்பவரை தேடி சென்றதில் 14.05.2021ந் தேதி 17.30 மணிக்கு நிறுத்தனமங்கலம் சுடுகாடு அருகில் நின்றுகொண்டிருந்தவரை கைதுக்கான காரணம் கூறி 17.30 கைது செய்தும், சாட்சிகள் மாரியப்பன், கண்ணன் ஆகியோர்கள் முன்பாக எதிரி சுந்தரபாண்டியன் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரி மறைத்து வைத்திருந்த இவ்வழக்கில் காயம்பட்ட குமார் என்பவரை அடித்து காயம் ஏற்படுத்திய கருவைக்கட்டையை மறைத்து வைத்திருந்த இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை அன்றைய தினமே 19.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி எதிரி சுந்தரபாண்டியன் மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் ஆஜராகி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன் பின் 20.05.2021ந் தேதி வழக்கில் காயம்பட்ட குமார் என்பவர் 12.30 மணிக்கு இறந்துவிட்டதாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த வான்வழி தகவலை பெற்று இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை காவல் ஆய்வாளர் திரு. பெரியசாமி அவர்கள் 15.00 மணிக்கு சட்டப்பிரிவு 341, 294(b), 307 இ.த.ச Altered 341, 294(b), 302 இ.த.ச வாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அதன் துரித அறிக்கையினை முதல்நிலை காவலர் திரு. ஆதிகேசவன் என்பவர் மூலம் நீதிதுறை நடுவர் எண் 1 க்கு அனுப்பி வைத்துள்ளார். 21.05.2021ந் தேதி காலை காவல் ஆய்வாளர் பெரியசாமி அவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் பழனிவேல், ஜெயராமன், விக்னேஷ், குபேந்திரன், உதயபிரகாஷ் ஆகியோர் முன்பாக இறந்துபோன குமாரின் பிரேத்தின்

மீது சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்து பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணைக்கு பின் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதத்தை காவலர் 261 ஸ்ரீதர் மூலம் கொடுத்து அனுப்பினார். பின் இவ்வழக்கில் இறந்துபோன நபரின் உடலில் இருந்து சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை சேகரம் செய்து பரிசோதனை செய்ய வேண்டி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு காவலர் 261 ஸ்ரீதர் என்பவர் மூலம் அனுப்பி வைத்தார். பின் வழக்கு சொத்தான கருவை கட்டையை 15.06.2021ந் தேதி நீதிதுறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் ஒப்படைத்து CP No. 54/2021 பெற்றுள்ளார். 30.06.2021ந் தேதி மேலும் காவல் ஆய்வாளர் பெரியசாமி இவ்வழக்கில் இறந்துபோன நபரை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த மருத்துவர் மூர்த்தி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபாகரன், தடய அறிவியல் ஆய்வக அறிக்கை வழங்கிய டாக்டர் சிவக்குமார், துரித முதல் தகவல்அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைத்த காவலர் ஆதிகேசவன், காவலர் ஸ்ரீதர் ஆகியோர்களையும் மேலும் சாட்சிகள் லாவண்யா, ரமேஷ்குமார், குபேந்திரன் ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் முந்தைய ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தையே என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. வழக்கு கோப்பை பார்வையிட்டு இத்துடன் இவ்வழக்கில் விசாரணையை முடித்து 13.08.2021ந் தேதி எதிரி சுந்தரபாண்டியன் மீது இறுதி அறிக்கையினை கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1க்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக விரோதம் இருந்த விபரத்தை என் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வழக்கு கோப்பை பார்வையிட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் சரிதான என உறுதி செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டீர்களா என்றால் சம்பவ இடத்தை பார்வையிட்டு நான் உறுதி செய்தேன். சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளதா என்றால் வீடுகள் உள்ளது சுமார் 100 மீட்டர் அளவில் உள்ளது. சம்பவ இடத்தின் அருகில் வீடுகள் இல்லை என்றும் அருகில் இருப்பவர்களை வழக்கு விசாரணையில் சாட்சியாக காட்டபடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மருத்துவர் இறந்ததாக சொல்லப்படும் நபருக்கு ஏற்பட்ட மரணத்திற்கான காரணம் மழுங்கிய நிலையில் உள்ள ஆயுதம் காரணமாக இருக்கலாம் என்று கூறியுள்ள நிலையில் வழக்கில் கைப்பற்றியுள்ள ஆயுதம் மழுங்கிய நிலையுடையது அல்ல என்றால் நினைவு இல்லை என்று சாட்சியம் கூறுகிறார். இறந்த நபருக்கு பின்பக்க தலையில் ஏற்பட்ட கிழிந்த காயம் வழக்கு சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதத்தால் கிழிக்கக்கூடிய காயங்களை ஏற்படுத்த முடியாது அது குறித்து நான் மருத்துவரிடம் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன் மருத்துவர் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சொன்னார்கள் ஆனால் இது குறித்து நான் என்னுடைய விசாரணை அறிக்கையில் சொல்லவில்லை. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். ஏற்கனவே தயார் செய்த ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை நான் நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றும், இதற்கு முன்பு விசாரணை செய்த ஆய்வாளரின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேனா என்றால் சரியல்ல. சம்பவ நடந்த காலமானது கொரோனா தொற்று அதிகம் உள்ள காலம் என்று

சொன்னால் சரிதான். வழக்கில் இறந்துபோனவரை நல்லடக்கம் செய்ய கொரோனா விதிமுறை பின்பற்றி தான் நல்லடக்கம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். பட்டியல் சாட்சிகள் அனைவரும் இறந்துபோனவரின் உறவினர்கள் என்றாலும், ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.